அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2018

## 42 - இந்து சமயம்

## புள்ளியிடும் திட்டம்



**ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயம்**

இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..................................................................... ✓ △ $\frac{4}{5}$
.....................................................................
.....................................................................

(ii) ..................................................................... ✓ △ $\frac{3}{5}$
.....................................................................
.....................................................................

(iii) ..................................................................... ✓ △ $\frac{3}{5}$
.....................................................................
.....................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்களை தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II" எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியை பதிய வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

ooo

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2018

## 42 - இந்து சமயம்

## புள்ளி வழங்கும் திட்டம்

இது இரண்டு பகுதிகளைக் கொண்டது. பகுதி ஒன்றின் மூன்று வினாக்களில் ஏதேனும் இரண்டு வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ள 5 வினாக்களில் ஏதேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் 5 வினாக்களுக்கு பரீட்சாத்திகள் விடை எழுத வேண்டும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் பத்திரம் II ற்கு மொத்தம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.

- பத்திரம் I க்கு $50 \times 2 = 100$ புள்ளிகள்
- பத்திரம் II க்கு $5 \times 20 = 100$ புள்ளிகள்

| | | |
|---|---|---|
| இறுதிப்புள்ளி கணக்கிடல் | | |
| பத்திரம் I | - | 100 புள்ளிகள் |
| பத்திரம் II | - | 100 புள்ளிகள் |
| இறுதிப்புள்ளிகள் | - | $200 \div 2 = 100$ |

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ட்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

06.08.2018 / 0830 - 1030

හින්දු ධර්මය I
இந்து சமயம் I
Hinduism I

**42 T I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள்:**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

● 01 தொடக்கம் 05 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாததைத் தெரிவுசெய்க.

1. (1) வாரம் (2) திதி (3) மாதம்
(4) யோகம் (5) கரணம்

2. (1) இயமம் (2) நியமம் (3) தூய்மை
(4) ஆசனம் (5) பிரத்தியாகாரம்

3. (1) அக்கினி (2) பிருதுவி (3) சோமன்
(4) சிந்து (5) உருத்திரன்

4. (1) சாங்கியம் (2) சுத்தாத்வைதம் (3) நியாயம்
(4) வைசேடிகம் (5) யோகம்

5. (1) அண்ணமார் (2) பெரியதம்பிரான் (3) கண்ணகி
(4) திரிபுராந்தகர் (5) நாச்சிமார்

● 06 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிச் சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ளவை ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடிச் சொல்லைத் தெரிவுசெய்க.

6. (1) கலையின் பயன் - ஆன்மிக அனுபவம்
(2) தொல்பொருள் - கல்வெட்டுக்கள்
(3) சிந்துவெளி ஆய்வு - சேர் ஜோன் மார்ஷல்
(4) வேதம் - முதல்நூல்
(5) மகாபாரதம் - ஆதிகாவியம்

7. (1) பிரம்ம புராணம் - ஒன்று
(2) விஷ்ணு புராணம் - நான்கு
(3) அக்கினி புராணம் - ஒன்று
(4) சூரிய புராணம் - ஒன்று
(5) சிவபுராணம் - பத்து

8. (1) முருகன் - வெறியாட்டு
(2) மகேந்திரவர்மன் - குடபோகங்கள்
(3) சோழர்காலம் - உமாபதிசிவாசாரியர்
(4) பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் - அறம்
(5) வீரர் - நடுகல்

9. (1) பசுபதிச்செட்டியார் - வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம்
(2) சேர் பொன் இராமநாதன் - பரமேஸ்வரன் ஆலயம்
(3) இந்துபோர்ட் சு. இராசரத்தினம் - சைவவித்தியாவிருத்திச் சங்கம்
(4) ஆறுமுகநாவலர் - பாலபாடம்
(5) விபுலாநந்தர் - சைவபரிபாலனசபை

10. (1) வாகீசர் - ஞானாமிர்தம்
(2) மெய்கண்டார் - சிவஞானபோதம்
(3) அருணந்திசிவாசாரியர் - சிவஞானசித்தியார்
(4) உமாபதிசிவாசாரியர் - உண்மை விளக்கம்
(5) மணிவாசகர் - திருவாசகம்

- 11 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 'அ', 'ஆ' என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலுக்கு ஏற்ற விதத்தில் 'ஆ' நிரல் பொருத்தமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தைத் தெரிவுசெய்க.

11.

| அ | ஆ |
|---|---|
| (i) ஆண்டாள் | A - நாலாயிரத்திவ்யப் பிரபந்தம் |
| (ii) நம்மாழ்வார் | B - திருமந்திரம் |
| (iii) நாதமுனிகள் | C - திருப்பாவை |
| (iv) திருமூலர் | D - திருமுருகாற்றுப்படை |
| (v) நக்கீரர் | E - திருவாய்மொழி |

(1) CAEBD (2) CBEDA (3) CEABD (4) EACBD (5) ECDBA

12.

| அ | ஆ |
|---|---|
| (i) திருவடி | A - வா |
| (ii) திருத்தோள் | B - ந |
| (iii) திருமுடி | C - சி |
| (iv) திருமுகம் | D - ம |
| (v) திருவயிறு | E - ய |

(1) ACEBD (2) BCEAD (3) BCEDA (4) CEADB (5) EBCAD

13.

| அ | ஆ |
|---|---|
| (i) யோகம் | A - யாகம் |
| (ii) மீமாம்சை | B - அட்டாங்கம் |
| (iii) நியாயம் | C - பிரகிருதி |
| (iv) சாங்கியம் | D - அணுக்கொள்கை |
| (v) வைசேடிகம் | E - வியாப்தி |

(1) ABECD (2) BAECD (3) BCEDA (4) EBACD (5) ECDAB

14.

| அ | ஆ |
|---|---|
| (i) தர்மத்தின் மூலம் | A - உயிரினங்களுக்கானது |
| (ii) அகம் பிரம்மாஸ்மி | B - சடங்கு |
| (iii) ஆகம முறைமைக்கு அமையாதது | C - வேதங்கள் |
| (iv) பூதயக்ஞம் | D - சூரியன் |
| (v) தைப்பொங்கல் | E - மகாவாக்கியம் |

(1) BAECD (2) CEBAD (3) CEDAB (4) DECAB (5) ECABD

15. அ ஆ
(i) பிரபக்தி A - அறியாமையை நீக்குவது
(ii) ஆணவம் B - சரியை
(iii) சாலோகம் C - திருவருட்சக்தி ஆன்மாவில் பதிதல்
(iv) தீக்கை D - மதம்
(v) சக்திநிபாதம் E - அப்பிரதக்சித்தி

(1) BDAEC (2) BDEAC (3) CAEBD (4) DEBAC (5) EDBAC

- **16** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

16. சைவசித்தாந்தக் கொள்கை பற்றி முதன் முதலில் குறிப்பிட்ட தமிழ் நூல்
(1) திருமந்திரம் (2) பெரியபுராணம் (3) சிவஞானபோதம்
(4) பகவத்கீதை (5) திருப்பாவை

17. அத்வைதக் கோட்பாட்டின் திறவுகோலாக அமையப்பெற்ற முக்கியமான நூல்
(1) வேதாந்த சங்கிரகம் (2) அனுவியாக்கியானம் (3) மாண்டூக்கியகாரிகை
(4) பாரத தாற்பரிய நிருணயம் (5) வேதாந்த தீபம்

18. வாற்சல்யபாவ நிலைக்குரிய பக்தர்
(1) யசோதை (2) இராதை (3) சீதை
(4) ஆண்டாள் (5) மீராபாய்

19. மகோற்சவத்தில் இடம்பெறும் தீர்த்தத் திருவிழா, ஐந்தொழில்களில் எதனைக் குறித்து நிற்கிறது ?
(1) படைத்தல் (2) காத்தல் (3) அருளல்
(4) அழித்தல் (5) மறைத்தல்

20. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் இந்துசமய வளர்ச்சிக்காக வெளியிடப்பட்ட பத்திரிகை
(1) விவேகானந்தன் (2) சைவ உதயபானு (3) சிவதொண்டன்
(4) சைவகாவலன் (5) மெய்கண்டார் நெறி

21. 'பஞ்சசித்தாந்திகை' எனும் தொகுப்பு நூலை வெளியிட்டவர்
(1) வராகமிகிரர் (2) ஆரியப்பட்டர் (3) ஸ்ரீதரர்
(4) பிரம்மகுப்தர் (5) லலாடதேவர்

22. புறத்தொழிலாலும் அகத்தொழிலாலும் அருவுருவத்திருமேனியை வழிபடுதல்
(1) சரியாபாதம் (2) யோகாபாதம் (3) ஞானபாதம்
(4) கிரியாபாதம் (5) தியானம்

23. "சத்யம் ஏவ ஜயதே" எனக் குறிப்பிடும் உபநிடதம்
(1) பிருகதாரணியகம் (2) சாந்தோக்கியம் (3) தைத்திரியம்
(4) கடோபம் (5) முண்டகம்

24. "சங்கத் தமிழ் மூன்றும் தா..." எனும் பாடல் இடம்பெற்றுள்ள நூல்
(1) நல்வழி (2) ஆத்திசூடி (3) கொன்றைவேந்தன்
(4) சுக்கிரநீதி (5) நீதிவெண்பா

25. 'வித்யாவிநீதன்' எனும் விருதுப்பெயர் பெற்ற மன்னன்
(1) மகேந்திரவர்மன் (2) பரமேசுவரவர்மன் (3) மாமல்லன்
(4) இரண்டாம் குலோத்துங்கன் (5) மூன்றாம் சிம்மவர்மன்

26. வைசேடிகர் கூறும் பதார்த்தங்கள் மாத்திரம் அடங்கிய தொகுதி
(1) திரவியம், குணம், விசேடம், சமவாயம், அபாவம்
(2) சாமானியம், விசேடம், குணம், பாவம், திரவியம்
(3) சமவாயம், குணம், திரவியம், அதர்மம், விசேடம்
(4) தர்மம், சாமானியம், நிர்க்குணம், விசேடம், சமவாயம்
(5) குணம், அபாவம், சமவாயம், அதர்மம், திரவியம்

27. 'அத்வைதம்' என்ற சொல்லுடன் தொடர்புடையனவற்றை மாத்திரம் கொண்ட தொகுதி
(1) அன்மை, இன்மை, மறுதலை, ஒற்றுமை, சிறுமை
(2) அன்மை, மறுதலை, வேற்றுமை, பொறையின்மை, இன்மை
(3) மறுதலை, பெருமை, இன்மை, வேற்றுமை, அன்மை
(4) பொறையின்மை, சிறுமை, வேற்றுமை, மறுதலை, பெருமை
(5) இன்மை, ஒற்றுமை, சிறுமை, பொறையின்மை, மறுதலை

28. கூத்துக்களுக்குப் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள் மாத்திரம் உள்ளடங்கிய தொகுதி
(1) மத்தளம், சல்லரி, வயலின், உடுக்கை, பறைமேளம்
(2) நாதஸ்வரம், பறைமேளம், சல்லரி, உடுக்கை, வீணை
(3) சல்லரி, பறைமேளம், உடுக்கை, நாதஸ்வரம், புல்லாங்குழல்
(4) மத்தளம், சல்லரி, உடுக்கை, பறைமேளம், நாதஸ்வரம்
(5) பறைமேளம், ஒகன், சல்லரி, உடுக்கை, மத்தளம்

29. இந்திய ஆண்டின் பருவங்கள் மாத்திரம் அடங்கிய தொகுதி
(1) வசந்தம், கிரீட்மம், ஹேமந்தம், வர்ஷ, சரத்
(2) சிசிரம், ஹேமந்தம், சுக்கில, சரத், வர்ஷ
(3) கிரீட்மம், வர்ஷ, ஹேமந்தம், கிருஷ்ண, சிசிரம்
(4) சரத், சிசிரம், ஹேமந்தம், பட்ச, கிரீட்மம்
(5) வார, கிரீட்மம், வசந்தம், சரத், வர்ஷ

30. கன்மத்தின் குணங்களை மாத்திரம் கொண்ட தொகுதி
(1) இருத்தல், கிடத்தல், நோக்கல், இயற்றல், மேவல்
(2) விடுதல், இயற்றல், பரநிந்தை, மேவல், இருத்தல்
(3) கிடத்தல், மேவல், ஏற்றல், பரநிந்தை, இருத்தல்
(4) பரநிந்தை, ஏவல், இருத்தல், கிடத்தல், விடுதல்
(5) மேவல், நோக்கல், பரநிந்தை, இருத்தல், இயற்றல்

- **31 தொடக்கம் 35 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவுசெய்க.**

31. தட்சிணாமூர்த்தி
(1) இறைவன் குருவாக எழுந்தருளிய வடிவம் இதுவாகும்.
(2) இது சந்தான குரவர் மரபின் மூல வடிவமாகும்.
(3) இவர் 'தென்முகக் கடவுள்' எனவும் அழைக்கப்படுவார்.
(4) இம்மூர்த்தம் மார்கழித் திருவாதிரையுடன் தொடர்புடையது.
(5) இத்திருவுருவம் சச்சிதானந்த நிலையை உணர்த்தும்.

32. கடையிற்சுவாமிகள்
(1) பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெங்களூரில் வாழ்ந்தார்.
(2) இவர் நீதிபதியாகக் கடமையாற்றினார்.
(3) குழந்தைவேல் சுவாமிகளின் உத்தம சீடராக விளங்கினார்.
(4) இவர் 'முத்தியானந்தர்' எனும் தீட்சாநாமம் கொண்டவர்.
(5) யாழ்ப்பாணத்தில் சமாதியடைந்தார்.

33. உமாபதி சிவாச்சாரியர் இயற்றிய நூல்கள்
(1) கோயிற்புராணம் சிதம்பரத் தலத்தின் சிறப்பை விளக்குகிறது.
(2) சிவஞானபோதச் சிற்றுப்பாயிரமானது சிவஞானபோதத்துக்கான ஒரு சிறப்பான அறிமுகமாகும்.
(3) கொடிக்கவியானது சிதம்பரத்தில் கொடியேறச் செய்த அற்புத நிகழ்வுடன் தொடர்புடையது.
(4) பௌஷ்கராகம வியாக்கியானமானது வடமொழியில் எழுதப்பட்ட உரை விளக்கமாகத் திகழ்கிறது.
(5) சேக்கிழார் புராணமானது சேக்கிழாரின் சமய, கவித்துவ ஆளுமைச் சிறப்பை விளக்கும் நூலாகும்.

**34.** இந்து தரிசனங்கள்
(1) காலத்தால் முற்பட்டவை.
(2) ஞானிகளால் நிலைநிறுத்தப்பட்டவை.
(3) வேதங்களை அடிப்படையாகக் கொண்டவை.
(4) அறிவுக் கொள்கைக்கு முதன்மை கொடுப்பவை.
(5) கடவுள் உண்மையை ஏற்றுக்கொள்பவை.

**35.** துவைத வேதாந்தம்
(1) இது ஒரு பன்மைவாதக் கொள்கையாகும்.
(2) இக் கோட்பாட்டை நிலைநிறுத்தியவர் மத்துவராவார்.
(3) இக் கோட்பாட்டில் ஜீவகைப் பேதங்கள் கூறப்படுகின்றன.
(4) இது வைணவ மதச்சார்புடையது.
(5) இதற்கு ஸ்ரீபாஷ்யம் அடிப்படையாக உள்ளது.

● மேல்வரும் பகுதியில் A - J வரையில் தரப்பட்டுள்ள சொற்களுள் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்டவொரு விடயத்தோடு தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் 36 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>காசிவாசி செந்திநாதையர் | B<br>ஆரியப்பட்டர் | C<br>ஷேத்திரவெண்பா | D<br>அருணகிரிநாதர் | E<br>தாழிக்குமரன் |
| F<br>உஜ்ஜையினி | G<br>நிலாவெளிச்சாசனம் | H<br>வித்தியாரண்யர் | I<br>ஜலசயனம் | J<br>இந்துசாதனம் |

**36.** பல்லவர்கால இந்துப் பண்பாட்டு வளர்ச்சிநிலையுடன் தொடர்புடைய சோடி
(1) AJ (2) CD (3) CI (4) DE (5) HI

**37.** இந்திய அறிவியற் புலத்தில் வானியலுடன் தொடர்புடைய சோடி
(1) BF (2) BH (3) EF (4) EH (5) IJ

**38.** 'இந்து சமய வரலாற்றின் எழுச்சிக்காலம்' எனப் போற்றப்படும் விஜயநகரப் பேரரசு ஆட்சிக் காலத்துடன் தொடர்புடைய சோடி
(1) CD (2) CH (3) DE (4) DH (5) EH

**39.** இலங்கையின் சைவசமய மறுமலர்ச்சியுடன் தொடர்புடைய சோடி
(1) AG (2) AJ (3) CJ (4) DH (5) EH

**40.** இலங்கையில் பாடல்பெற்ற திருத்தலங்களுடன் தொடர்புடைய சோடி
(1) AG (2) CD (3) CI (4) EG (5) EI

● தமிழக ஓவியக்கலை மற்றும் மெய்கண்டார் பற்றிய விடயங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு 41 தொடக்கம் 45 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.

தமிழக ஓவியக்கலை
A - தஞ்சைப் பெரிய கோயிலின் ஒரு பக்கச் சுவரில் அர்த்தயோகப்பட்டத்துடன் கூடிய யோகதட்சணாமூர்த்தி ஓவியம் வரையப்பட்டுள்ளது.
B - மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலுள்ள திருமணக் காட்சி ஓவியத்தில் ராணி மங்கம்மாவும் தளவாய் நரசப்பையரும் பார்வையாளராக வரையப்பட்டுள்ளனர்.
C - தஞ்சைப் பெரியகோயில் ஓவியங்களில் இராஜராஜனும் கருவூர் தேவரும் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.
D - தஞ்சைப் பெரியகோயில் ஓவியங்களில் சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமான் பெருமாளும் கைலை செல்லும் காட்சியைச் சித்திரிக்கும் ஓவியமும் உள்ளது.
E - சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட வரலாற்றைச் சித்திரிப்பதாக அமைந்த ஓவியம், தஞ்சைப் பெருங்கோயில் ஓவியங்களில் இடம்பெற்றுள்ளது.
F - பௌராணிக மரபிலிருந்து சற்று வேறுபட்டு விரிவான விதத்தில் திரிபுராந்தகரின் போர்க்கோலக் காட்சி தஞ்சைப் பெரியகோயிலின் வடபுறச் சுவர் முழுவதிலும் வரையப்பட்டுள்ளது.

**41.** தமிழக அரச வம்ச வரலாற்றுச் செய்திகளைப் பிரதிபலிக்கும் சோடி
(1) AF (2) BC (3) CE (4) CF (5) DE

42. சிவமூர்த்தத்துடன் தொடர்புடைய சோடி
(1) AE (2) AF (3) BC (4) CD (5) EF

43. சிவனடியார்களுடன் தொடர்புடைய சோடி
(1) AC (2) BD (3) CF (4) DE (5) DF

**மெய்கண்டார்**

A - சைவசித்தாந்த நூற்பொருளை நாற்பத்தொன்பது மாணவர்களுக்குப் போதித்தவர்.
B - பரஞ்சோதி முனிவரிடமிருந்து சிவஞான உபதேசம் பெற்றவர்.
C - இவரது முதன்மைச் சீடர் அருணந்தி சிவாசாரியராவார்.
D - இவர் புறச்சந்தான குரவர் பரம்பரைக்கு முன்னோடியானவர்.

44. மெய்கண்டாரது மாணாக்கரை விளக்கும் கூற்றுகள் அடங்கிய சோடி
(1) AB (2) AC (3) AD (4) BC (5) CD

45. சந்தான குரவர் பரம்பரைக்கு முதல்வராக அமைந்தமையை விளக்கும் கூற்றுகள் அடங்கிய சோடி
(1) AB (2) AC (3) AD (4) BC (5) CD

- **46 தொடக்கம் 50** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் தலைப்புக்கு மிகப்பொருத்தமானதைத் தெரிவுசெய்க.

46. சைவ தத்துவ நோக்கில் நடராஜமூர்த்தம்
(1) அறுபத்துநான்கு சிவமூர்த்தங்களில் தலையாயது.
(2) உத்தமதசதாலத்தில் அமைக்கப்படுவது.
(3) பஞ்சகிருத்தியத்தை உணர்த்தி நிற்பது.
(4) சோழப் பெருமன்னர்களால் பெரிதும் ஆராதிக்கப்பட்டது.
(5) கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தது.

47. சாங்கியம் கூறும் சத்காரியவாதம்
(1) இருமைவாதம் பற்றிப் பேசுகிறது.
(2) புருடனைப் போக்தாவாகக் கருதுகிறது.
(3) 'பூரண அறிவு' பற்றி விளக்குகிறது.
(4) கபிலரை ஸ்தாபகராகக் குறிப்பிடுகிறது.
(5) பிரகிருதியைப் பிரபஞ்சமூலமாகக் கருதுகிறது.

48. விரதம்
(1) நோன்பு என்றும் பொருள்படும்.
(2) இறைவனின் திருவருளைப் பெறுவதற்கானதொரு வழிமுறையாகும்.
(3) இறைவனை மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் மெய்யன்போடு வழிபடுதலாகும்.
(4) மனதை ஒருநிலைப்படுத்த உதவும்.
(5) உலகியல் வாழ்வை மேம்படுத்த உதவும்.

49. கண்ணகி வழிபாட்டின் முக்கியத்துவம்
(1) கிராமியப் பெண்தெய்வ வழிபாட்டில் கண்ணகி வழிபாடு முக்கிய இடத்தைப் பெறுகிறது.
(2) சிலப்பதிகாரத்தில் கண்ணகி வழிபாடு இடம்பெற்றுள்ளது.
(3) குன்றக் குரவர் கண்ணகியைக் குலதெய்வமாக வழிபட்டனர்.
(4) இலங்கையில் கஜபாகு மன்னன் காலத்தில் இவ்வழிபாட்டுமுறை அறிமுகமானது.
(5) இது ஒழுக்கத்தை முதன்மைப்படுத்தும் வழிபாடாக அமைந்துள்ளது.

50. சிவவாக்கியரும் விடுதலையும்
(1) சிவவாக்கியர் சந்த நடையில் அனேக பாடல்களைப் பாடியவர்.
(2) இவர் சமுதாயப் பணி மூலம் சமயப் பணிகளை வற்புறுத்தியவர்.
(3) இவர் "நாழி உப்பும் நாழி அப்பும் நாழியானவாறு போல" எனக் குறிப்பிட்டுள்ளார்.
(4) சிவவாக்கியர் சமயங்களின் சமரசத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.
(5) இவர் அறிவால் இறைவனை வழிபடும் முறைமையினையே அழுத்தமாகக் குறிப்பிடுகின்றார்.

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2018

විෂයය අංකය / பாட இலக்கம்: **42**

විෂයය / பாடம்: **இந்து சமயம்**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 3 | 21. | 1 | 31. | 4 | 41. | 2 |
| 02. | 3 | 12. | 2 | 22. | 4 | 32. | 3 | 42. | 2 |
| 03. | 5 | 13. | 2 | 23. | 5 | 33. | 2 | 43. | 4 |
| 04. | 2 | 14. | 2 | 24. | 1 | 34. | 5 | 44. | 2 |
| 05. | 4 | 15. | 5 | 25. | 2 | 35. | 5 | 45. | 5 |
| 06. | 5 | 16. | 1 | 26. | 1 | 36. | 3 | 46. | 3 |
| 07. | 1 | 17. | 3 | 27. | 2 | 37. | 1 | 47. | 5 |
| 08. | 3 | 18. | 1 | 28. | 4 | 38. | 4 | 48. | 3 |
| 09. | 5 | 19. | 3 | 29. | 1 | 39. | 2 | 49. | 5 |
| 10. | 4 | 20. | 2 | 30. | 2 | 40. | 4 | 50. | 3 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 2 × 50 = 100

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

அධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

හින්දු ධර්මය II
இந்து சமயம் II
Hinduism II

42 T II

2018.08.07 / 08.30 - 11.40

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி I இல் **இரண்டு** வினாக்களையும், பகுதி II இல் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I

1. "வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது இந்துமதம்." இக்கூற்றுடன் தொடர்புபடுத்தி மேல்வரும் விடயங்களை ஆராய்க.
   (அ) தொன்மைச் சிறப்பு
   (ஆ) பரந்த மனப்பான்மை
   (இ) வேற்றுமையில் ஒற்றுமை
   (ஈ) ஆன்மிக விடுதலை

2. தமிழகத்திலே இயற்கை நெறிக் காலத்தில் நிலவிய மேல்வரும் வழிபாட்டு முறைகள் பற்றி விளக்குக.
   (அ) முருக வழிபாடு
   (ஆ) கொற்றவை வழிபாடு
   (இ) விஷ்ணு வழிபாடு
   (ஈ) நடுகல் வழிபாடு

3. "இந்து சமயக் கோயிற்கலை வரலாற்றில் சோழர்காலம் பொற்காலமாகும்." இக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் விடயங்களை ஆராய்க.
   (அ) கட்டடக்கலை
   (ஆ) சிற்பக்கலை
   (இ) ஓவியக்கலை
   (ஈ) இலக்கியம்

## பகுதி II

4. "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்" எனும் அறவியல் சிந்தனையை மேல்வரும் தலைப்புகளில் பரிசீலனை செய்க.
   (அ) அறம் பற்றிய விளக்கம்
   (ஆ) வேத இலக்கியங்களில் அறம்
   (இ) திருக்குறளில் அறம்
   (ஈ) நடைமுறை வாழ்வில் மனத்தூய்மை

5. "சதசத்தாம் உயிர்" என்ற சைவசித்தாந்தக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை ஆராய்க.
(அ) ஆன்மாவின் உண்மை
(ஆ) ஆன்மாவின் இயல்புகள்
(இ) ஆன்ம சித்சக்தி
(ஈ) ஆன்மாவும் இறைவனும்

6. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் ஏற்பட்ட இந்து சமய மறுமலர்ச்சிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆற்றிய பங்களிப்புகளை விவரிக்குக.

7. "இலங்கையின் இந்து சமய வளர்ச்சியில் கோயில்கள் மற்றும் இந்து சமய நிறுவனங்களின் பங்களிப்பு அளப்பரியது." இக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் ஒவ்வொன்றினதும் வகிபங்கினை மதிப்பிடுக.
(அ) திருக்கோணேச்சரம்
(ஆ) கதிர்காமம்
(இ) இராமகிருஷ்ண மிஷன்
(ஈ) யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை

8. மேல்வருவனவற்றுள் எவையேனும் நான்கிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.
(அ) ஆகமம் கூறும் நித்திய கிரியைகள்
(ஆ) விசிட்டாத்வைதம்
(இ) வைசேடிகம்
(ஈ) சிவஞானசித்தியார்
(உ) சூரிய வழிபாடு
(ஊ) பெரியானைக்குட்டி சுவாமிகள்

* * *

**01. "வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது இந்துமதம்" இக்கூற்றுடன் தொடர்புபடுத்தி மேல் வரும் விடயங்களை ஆராய்க.**

**அ. தொன்மைச் சிறப்பு**

**ஆ. பரந்த மனப்பான்மை**

**இ. வேற்றுமையில் ஒற்றுமை**

**ஈ. ஆன்மிக விடுதலை**

**அ. தொன்மைச் சிறப்பு**

உலக சமயங்களுள் மிகப் பழமையானது இந்து மதம். மிகப் பழைமையானதாகவும் புதுமையானதாகவும் இருப்பதால் சனாதன தர்மம் என்று வழங்கப்படுகின்றது. உலகிலே மிகப் பழமையான நூல்கள். வேதங்கள் இவை தர்மம் பற்றிக் கூறுவன. எனவே வைதிக தர்மம் எனவும் இந்துமதம் அழைக்கப்படுகின்றது. இந்துமதம் மிகவும் தொன்மையானது என்பதை வரலாற்று மூலங்கள் உறுதி செய்கின்றன. இந்து மதத்தின் தொன்மைச் சுவடுகளை தென்னாசிய, தென்கிழக்காசிய நாடுகளில் காணமுடிகிறது.

(05 புள்ளிகள்)

**ஆ. பரந்த மனப்பான்மை**

இந்து மதத்தின் சிறப்பான அம்சம் அதன் பரந்த மனப்பான்மையாகும். வழிபாட்டு முறையிலும், கொள்கைக் கடைப்பிடிப்பிலும் சுதந்திரம் கொண்டிருப்பது இந்து மதம். முடிவிலா வேறுபாடுகளைக் கொண்ட தத்துவக் கோட்பாடுகளும் வழிபாட்டு முறைகளும் காணப்பட்டாலும் அவற்றுக்கிடையே இழையோடி இருக்கும் ஒருமைத் தத்துவம் சிறப்புடையது. "எல்லா மக்களும் சுகமாக வாழ வேண்டும்" என்பதே இந்து மத வழிபாட்டின் நோக்கமாகும். இதனையே இந்து சமய வழிபாட்டில் "சர்வே ஜனகா சுகினோ பவந்து" என்று கூறுவதால் அறியலாம். ஏகம் சத் விப்ராஹா பகுதா வதந்தி என்பது இருக்கு வேத வாக்கு. ஒன்று தான் உண்மைப் பொருள் அறிஞர்கள் அதனைப் பலவாறாக கூறுவர். உபநிடதங்களும் இக்கருத்தை அரண் செய்கின்றன.

(05 புள்ளிகள்)

**இ. வேற்றுமையில் ஒற்றுமை**

இந்து மதத்தின் உட்கிளைகள் எல்லாம் அவற்றின் கொள்கை எதுவாயிருப்பினும் வீடு பேறடைவதற்கு அறநெறி வாழ்வின் தேவையை வலியுறுத்துகின்றன. எண்ணம், சொல், செயல் ஆகிய திரிகரண சுத்தியினாலேயே இறை அருளையும் நல்வாழ்வையும் பெறமுடியும் எனக் கூறுகின்றன. கொள்கையைக் காட்டிலும் நடத்தை முக்கியம் என்பதே சாராம்சம். பல நிறப் பசுக்கள் வெண்மையான பாலையே தருவது போல பல வழிகளும் ஒரே இலட்சியத்தை நோக்கி நம்மை அழைத்துச் செல்வன என்பது உபநிடத வாக்கு.

பகவத்கீதையும் மனிதர்கள் என்னை எம்முறையில் அணுகினாலும் அம்முறையில் நான் அவர்களை ஏற்கிறேன். அவர்கள் கொள்ளும் எவ்வழியும் என் வழியே எனக் குறிப்பிடுகின்றது. இராமகிருஸ்ண பரமஹம்சரும் பல்வேறு சமயங்களும் ஒரே கங்கையை நோக்கிப் பாயும் ஆறுகளைப் போன்றவை எனக் குறிப்பிடுகின்றார். பலமொழிகளிலும் இந்து சமய உண்மைகள் கூறப்பட்டுள்ளன.

(05 புள்ளிகள்)

**ஈ. ஆன்மீக விடுதலை**

இந்துமதம் வாழ்க்கை வாழ்வதற்கே என்ற கொள்கையுடையது. அவ்வகையில் வாழ்வாங்கு வாழ்ந்து ஆன்மீக விடுதலை பெற கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் என்ற மூவகை யோகங்களை எடுத்துக் கூறுகின்றது. இந்து மதக் கூறான சித்தாந்த சைவம் ஆன்மிக விடுதலைக்கு சைவ நாற்பாதங்களையும் நான்கு மார்க்கங்களையும் குறிப்பிடுகின்றது. (05 புள்ளிகள்)

**02. "தமிழகத்திலே இயற்கை நெறிக் காலத்தில் நிலவிய மேல்வரும் வழிபாட்டு முறைகள் பற்றி விளக்குக.**

**அ. முருக வழிபாடு**

**ஆ. கொற்றவை வழிபாடு**

**இ. விஷ்ணு வழிபாடு**

**ஈ. நடுகல் வழிபாடு**

**அ. முருக வழிபாடு**

சங்ககாலம் இயற்கை நெறிக்காலம் என்று அழைக்கப்படுகின்றது. இக்காலத்தில் நிலவிய முருக வழிபாடு பற்றி அறிய திருமுருகாற்றுப்படை, பரிபாடல் முதலிய பழந்தமிழ் நூல்கள் உதவுகின்றன. ஆரிய திராவிட இணைப்பை முருக வழிபாடு சுட்டுவதாகவுள்ளது. திருமுருகாற்றுப்படையில் இவ்விருவகை வழிபாட்டு முறைகளையும் காணலாம். ஆறுபடை வீடுகள் பற்றிய குறிப்புகள், முருகனுக்கு பலியிடும் வழக்கம், முருகனிடம் அருள், அன்பு, அறம் என்ற மூன்றையும் வேண்டுதல். ( பரிபாடல் ) முருகனை 'சேயோன் மேயமை வரை உலகமும்" என்கிறது தொல்காப்பியம். முருகனை வேலன் வெறியாட்டம், குரவைக் கூத்து ஆகியவை மூலமும் வழிபட்டனர். (05 புள்ளிகள்)

**ஆ. கொற்றவை வழிபாடு**

இயற்கை நெறிக்காலத்தில் கொற்றவை வழிபாடு சிறப்புற்றிருந்தது. போரில் வெற்றி தரும் தெய்வமாக கொற்றவை வணங்கப் பெற்றார். " போர்க்கொற்றவை" முருகன் கொற்றவையின் மகன் என்று கூறப்படுகின்றான். இது "கொற்றவை சிறுவ" என வருவதால் அறியலாம். முருகன் பாலை நிலத் தெய்வமாக வணங்கப்பட்டார். கொற்றவை அக்காலத்தில் காடமர் செல்வி என்ற பெயர்களினால் வணங்கப்பட்டாள்.

(05 புள்ளிகள்)

**இ. விஷ்ணு வழிபாடு**

இயற்கை நெறிக்காலத்தில் விஸ்ணு வழிபாடு சிறப்புற்றிருந்தது. விஸ்ணு முல்லை நிலத்துக்குரிய தெய்வமாக வணங்கப்பட்டார். "மாயோன் மேய காடுறை உலகமும்" – தொல்காப்பியம் –

விஸ்ணுவின் தேவியாக திரு என்பவள் விளங்கியமை பற்றிய குறிப்புக்கள் உள்ளன. பரிபாடலில் விஸ்ணு வழிபாடு பற்றிய செய்திகள் உள்ளன. விஸ்ணுவுக்குரிய திருவோண நல்நாள் பற்றிய குறிப்பும் பழந்தமிழ் இலக்கியங்களில் உள்ளன.

(05 புள்ளிகள்)

ஈ. நடுகல் வழிபாடு

இயற்கை நெறிக்காலத்தில் நடுகல் வழிபாடு சிறப்புற்றிருந்தது. போரில் இறந்த வீரனைப் புதைத்து அதில் கல்நட்டு அதில் அவரின் வீரம், புகழ் என்பவற்றை எழுதி அக்கல்லுக்கு முன்பாக படையல் படைத்து வழிபட்டதான செய்திகள் புறநானூறு, அகநானூறு முதலிய பழந்தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. நடுகல் வணக்கம் பிற்கால கோயில் கட்டடக்கலைக்கும், உருவ வணக்கத்திற்கும் ஆரம்பநிலை என்பர். பிற்காலத்தில் பள்ளிப்படைக் கோயில்கள் தோன்றுவதற்கு ஆரம்பகால நடுகல் வழிபாடு அடிப்படையென அறிஞர்கள் கூறுகின்றனர். (05 புள்ளிகள்)

**03. "இந்து சமயக் கோயிற்கலை வரலாற்றில் சோழர்காலம் பொற்காலமாகும்" இக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் விடயங்களை ஆராய்க.**

**அ. கட்டடக்கலை**

**ஆ. சிற்பக்கலை**

**இ. ஓவியக்கலை**

**ஈ. இலக்கியம்**

**அ. கட்டடக்கலை**

திராவிடக்கலையின் மகோன்னத வெளிப்பாடுகளாகச் சோழர்காலக் கோயில்கள் திகழ்கின்றன. புனரமைப்பு, புத்தாக்கம் என இரு நிலைகளிலும் சோழர்காலக் கட்டடக்கலை சிறந்து விளங்குகிறது. பொதுவாகச் சோழர்காலக் கட்டடக்கலை வரலாற்றை மூன்று பிரிவுகளாகப் பகுத்து நோக்குவர்.

1. முற்காலச் சோழர் கலைப்பாணிக்குரிய ஆலயங்கள் (கி.பி 850 - 985)
2. இடைக்காலச் சோழர் கலைப்பாணிக்குரிய ஆலயங்கள் (கி.பி 985 - 1070)
3. பிற்காலச் சோழர் கலைப்பாணிக்குரிய ஆலயங்கள் (கி.பி 1070 - 1270)

**முற்காலச் சோழர் கலைப்பாணிக்குரிய ஆலயங்கள்**

விஜயாலயசோழன் ஆட்சிக்காலத்துக்குரிய ஆலயங்களாக இவை அடையாளங் காணப்படுகின்றன. ( கி.பி 9 - 10 ஆம் நூற்றாண்டு ) சோழர் கட்டடக்கலைப்பாணியின் முகிழ்ப்புநிலைக்குரிய காலகட்டம். கோயில்கள் அளவிற் சிறியவை. நான்கு தள விமானங்கள், மூல ஆலயத்தின் நான்கு திசைகளிலும் பரிவாராலயங்கள், புதுக்கோட்டை மூவர்கோயில், கண்ணனூர் பாலசுப்ரமணியர், நார்த்தாமலை விஜயாலய சோழேஸ்வரம் போன்ற ஆலயங்கள்

**இடைக்காலச் சோழர் கலைப்பாணிக்குரிய ஆலயங்கள்**

சோழப் பேரரசின் பெருமையினை எடுத்தியம்பும் பிரதான அடையாளச் சின்னங்களாக விளங்குகின்றன. 1 ஆம் ராஜராஜன் 1 ஆம் இராஜேந்திர சோழன் போன்ற கீர்த்தி மிக்க அரசர்களின் திருப்பணிகளாற் சிறந்த ஆலயங்கள் இக்காலப்பகுதிக்குரியவை. இக்காலகட்டத்திலே ஆலயங்களின் சிறப்பம்சங்கள்: அளவிற் பெரியவை, விசாலமான வளாகங்களுடையவை, பிரமிட் வடிவ விமானங்கள், மண்டபங்கள், சுற்றாலைகள், தனிக்கல்லாலான பிரமாண்டமான நந்தியும் காணப்படுகிறது. சிறப்பாகத் தஞ்சைப் பெரிய கோயில், கங்கை கொண்ட சோழேஸ்வரம் பற்றிய கட்டடக்கலையுடன் தொடர்புடைய விவரணங்கள்.

**பிற்காலச் சோழர் கலைப்பாணிக்குரிய ஆலயங்கள்**

சிதம்பரம், திரிபுவனேஸ்வரம், ஐராவதேசுவரம் போன்ற ஆலயங்கள் இக்காலப்பகுதிக்குரியவை. இவற்றின் நுணுக்கமான கலையம்சம் பொருந்திய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய விமானத் தேவகோட்டங்கள், மண்டபங்கள், கோபுரங்கள் ஆகியவற்றின் சிறம்பம்சங்கள்.

சிதம்பரம், ஐராவதேசுரம் ஆகிய தளங்களின் கட்டடக்கலையம்சங்கள் குறித்த விவரணங்கள் பிற்கால விஜய நகர காலக் கோயிற் கட்டடக்கலைக்கான முன்னோடியாக விளங்கியமை. (05 புள்ளிகள்)

**ஆ. சிற்பக்கலை**

இந்துசமயக் கோயிற்கலை வரலாற்றில் சோழர்காலத்தில் விளங்கிய சிற்பங்கள் தனித்துவமானவையாக விளங்குகின்றன.

முற்காலச் சோழர் கோயில்கள், இடைக்காலச் சோழர் கோயில்கள், பிற்காலச் சோழர் கோயில்கள் : தஞ்சைப்பெருங்கோயில், கங்கை கொண்ட சோழேஸ்வரம், சிதம்பரம், ஐராவதேஸ்வரம், கண்ணனூர் பால சுப்ரமணிய கோயில் என்பன முக்கியமானவை

**தஞ்சை பெருங்கோயில் சிற்பங்கள்**

ஆலயப் பிற்சுவர்களில் சிவவடிவங்கள் காணப்படுகின்றன. பெரிய அளவிலான சிவலிங்கத் திரு மேனியுடன் விளங்கும் வடிவம், சுற்றுப் பிரகாரங்களில் சிவ வடிவம் காட்சி தருதல், திரிபுராந்தகர் வடிவம், அட்ட வீரட்டச் செயல்களைக் குறிக்கும் சிற்பங்கள், காலாரி வடிவம் சிறப்புப் பெறுதல்.

கலைமகள், திருமகள், சனீஸ்வரன், துர்க்கை, மகிடாசுரமர்த்தினி என்போருக்கான சிற்பங்கள் காணப்படுதல். விமானத்தின் உட்பகுதியில் 81 நாட்டிய கரண சிற்பங்கள் இடம் பெறுதல். நடராஜ வடிவம், மாணிக்கவாசகர் வடிவம் சிறப்புப் பெறல், தியாகராஜவடிவம் சோழர்கால செப்பு வடிவங்களில் தனிச்சிறப்புடையது.

தாராசுரம் கோயில்

திருநாவுக்கரசர் திருவையாற்றில் கண்ட சிவக் காட்சியை ஒரு பதிகமாகப் பாடியுள்ளார். இப்பதிகத்தைப் புலப்படுத்தும் சிற்பக் கோயிலாக இக்கோயில் திகழ்கிறது.

ஐராவதேஸ்வர ஆலயச் சிற்பங்கள்

விமானம், தேவகோட்டம், சுவர் போன்ற பகுதிகளில் பல சிற்பங்கள் காணப்படுகின்றன. பல சிற்பங்களைக் கொண்டுள்ளதால் “சிற்பங்களால் இழைக்கப்பட்ட ஒரே சோழர் வளாகம்” என இவ்வாலயம் அழைக்கப்படுகின்றது. கண்ணனூர் பாலசுப்ரமணிய கோயிலில் முருக வடிவம் காணப்படுவதுடன் அவரின் வாகனமாகிய யானை வடிவமும் காணப்படுகிறது. சோழர்கால வைணவ ஆலயங்களில் அவதாரச் சிற்பங்கள் காணப்படுகின்றன. (05 புள்ளிகள்)

**இ. ஓவியக்கலை**

சோழர் காலக் கோயில்களில் ஓவியக்கலை நன்கு வளர்த்தெடுக்கப்பட்டது. முதலாம் இராஜராஜனால் கட்டப்பட்ட தஞ்சைப் பெருவுடையார் கோவிலில் ஓவியக்கலையின் சிறப்பையும், வனப்பையும் காணலாம்.

தஞ்சைப் பெருவுடையார் கோவிலின் கருவறையைச் சுற்றியுள்ள சுற்றாலையின் இருபக்கங்களிலும் கவின்மிகு ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. அவற்றுள்

1. யோக தட்சணாமூர்த்தி ஓவியம்
2. திருக்கைலைக் காட்சி ஓவியம்
3. சுந்தரரும் சேரமான் பெருமாளும் கைலை செல்லும் ஓவியம்.
4. தில்லைத் திருக்காட்சி ஓவியம்.
5. இராசராசனும் கருவூர்த்தேவரும் ஓவியம்.
6. திரிபுராந்தகர் ஓவியம் என்பவை குறிப்பிடதக்கவை.

மங்கையரின் மாண்புமிகு ஓவியங்களும் நடன மாதர்களின் ஓவியங்களும் அங்கே காணப்படுகின்றன. சோழர்காலத்தில் அமைக்கப்பட்ட பிற வைணவ ஆலயங்களிலும் கடவுளரின் ஓவியங்கள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05 புள்ளிகள்)

**ஈ. இலக்கியம்**

சைவ அடியார்களின் வரலாற்றைச் சேக்கிழார், பெரிய புராணம் எனும் சைவக் காப்பியமாக இயற்றினார் சைவ இலக்கியங்கள் தொகுக்கப்பட்டன. நம்பியாண்டார் நம்பி, சேந்தனார் கருவூர்த்தேவர் என்போரின் பனுவல்கள் தோன்றின.

கச்சியப்பர் கந்தபுராணத்தை இயற்றினார். திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞான போதம் தோன்றின. கம்பர் கம்பராமாயணத்தை இயற்றினார். நாலாயிரத் திவ்விய பிரபந்தத் தொகுப்பு, சைவ வைணவ சமய காப்பிய இலக்கியங்கள் தோன்றிய காலம் சோழர் காலம். (05 புள்ளிகள்)

**04. "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்" எனும் அறவியல் சிந்தனையை மேல்வரும் தலைப்புகளில் பரிசீலனை செய்க.**

**அ. அறம் பற்றிய விளக்கம்**

**ஆ. வேத இலக்கியங்களில் அறம்**

**இ. திருக்குறளில் அறம்**

**ஈ. நடைமுறை வாழ்வில் மனத்தூய்மை**

**அ. அறம் பற்றிய விளக்கம்**

அறு + அம் = அறம் மனிதனை ஒழுங்குபடுத்தும் அறநெறியாகும். வடமொழியில் த்ரு என்பதற்குத் தாங்குவது என்பது பொருள். உலகத்தைத் தாங்குவது எதுவோ அதுவே தர்மம் ஆகும். தமிழில் அறம் என்றும் வடமொழியில் தர்மம் என்றும் கூறப்படுவது பிரபஞ்ச ஒழுங்கையும் தனி மனித ஒழுங்கையும் அடிப்படையாகக் கொண்டமைந்ததே அறம் அல்லது தர்மம் என்பதன் சொற்பொருளாகும்.

"வேதோ கில தர்ம மூலம்" வேதம் தான் தர்மத்தின் மூலம் மனித வாழ்வு செம்மையாகவும் ஆன்மீக மேம்பாடு பெறவும் அடிப்படையாக அமைவது அற ஒழுக்கமாகும். (05 புள்ளிகள்)

**ஆ. வேத இலக்கியங்களில் அறம்**

வேத இலக்கியங்களில் ரிதம் என்ற சொல் ஒழுங்கு என்ற கருத்தில் பயன்படுத்தப்படுகின்றது. உலகினைத் தாங்குவதும், அதை நிலை நிறுத்துவதும் ரிதமாகிய அறமே என இருக்குவேதம் குறிப்பிடுகின்றது.

வேதங்களில் அறக்கடவுளாக வருணன் போற்றப்படுகின்றான். இருக்கு வேதத்தில் வருணன் ரீதஸ்ய கோபா எனப்படுகின்றார். வர்ண சூக்கத்தில் நல்ல சிந்தனைகள் தோன்றவும் தீய சிந்தனைகளில் இருந்து விடுபடவும் இறை வழிபாடு செய்யும் நிலை காணப்படுகின்றது. (05 புள்ளிகள்)

மிக உயர்ந்த ஒழுக்க விழுமியங்களையே சிறந்த அறப்பண்புகளாக உபநிடதங்கள் குறிப்பிடுகின்றன.

| | | |
|---|---|---|
| ஸத்யம் வத | : | உண்மை பேசு |
| தர்மம் சர | : | அறவழியில் ஒழுகு |
| மாத்ரு தேவோ பவ | : | தாயை தெய்வமாக போற்று |
| பித்ரு தேவோ பவ | : | தந்தையை தெய்வமாகப் போற்று |
| ஆச்சார்ய தேவோ பவ | : | குருவைத் தெய்வமாக போற்று |
| அதிதிதேவோ பவ | : | விருந்தினரைத் தெய்வமாகப் போற்று (05 புள்ளிகள்) |

**இ. திருக்குறளில் அறம்**

திருக்குறள் மனிதனுடைய அர்த்தங்களான ( புருடார்த்தங்கள் ) அறம், பொருள், இன்பம் என்பவற்றைக் கூறும் நூல். இதன் நாலாவது அதிகாரம் அறன் வலியுறுத்தல்

"அறத்தால் வருவதே இன்பம்...."

"அறன் எனப்பட்டதே இல் வாழ்க்கை...."

"சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு"

மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறம் ஆகுல நீர பிற. என அறத்தின் சிறப்பினை வெளிப்படுத்துகிறது. (05 புள்ளிகள்)

**ஈ. நடைமுறை வாழ்வில் மனத்தூய்மை**

செயல் என்பது மனம், வாக்கு காயங்களால் இயற்றப்படுவது, இம்மூன்றிலும் மனதால் நினைத்தலே முதலில் இடம்பெறுவது. மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறம் என வள்ளுவர் மனத்தூய்மையைப் பற்றி விதந்தோதியுள்ளார்.

தூய நினைவு உள்ள ஒருவனின் நினைவில் எழும் சொல்லும் அவனால் செய்யப்படும் செயலும் மனிதனை மேம்பட்டவனாக்கும் தன்மையானது. புறத்தூய்மை நீராலமையும். அகத்தூய்மை வாய்மையாற் காக்கப்படும் என்பது வள்ளுவர் வாக்கு. வேதங்களும் இதிகாச புராணங்களும் அருளாளர்களின் தோத்திர சாத்திர நூல்களும் மனத்தூய்மையில் எழும் சத்தியம் பற்றி விதந்துரைக்கின்றன. தூய மனம் உள்ள இடத்தில் அன்பு சுரக்கும் ஆனந்தம் கிட்டும். (05 புள்ளிகள்)

**05. "சதசத்தாம் உயிர்" என்ற சைவசித்தாந்தக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை ஆராய்க.**

**அ. ஆன்மாவின் உண்மை**

**ஆ. ஆன்மாவின் இயல்புகள்**

**இ. ஆன்ம சித்சக்தி**

**ஈ. ஆன்மாவும் இறைவனும்**

**அ. ஆன்மாவின் உண்மை**

சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் என்ற முப்பொருளுண்மை கூறுவது. சிவஞானபோத மூன்றாம் சூத்திரம் ஆன்மாவின் உண்மையை பின்வருமாறு நிலை நாட்டுகின்றது. "உளது இலது என்றலின் எனதுடல் என்றலின் ஐம்புலன் ஒடுக்கம் அறித்லின் கண்படில் உண்டிவினையின்மையின் உணர்த்த உணர்தலின் மாயா வியந்திர தனுவினுள் ஆன்மா"

ஏனைய சித்தாந்த சாத்திர நூல்களில் உதாரணங்கள் காட்டுதல்.

(05 புள்ளிகள்)

**ஆ. ஆன்மாவின் இயல்புகள்**

சைவசித்தாந்தத்தில் பசு, ஜீவன், ஆன்மா தேகி, உள்ளம், சதசத்து எனப் பலவாறாக ஆன்மா அழைக்கப்படுகின்றது. பாசங்களுடன் சம்பந்தப்பட்டதால் பசு என அழைக்கப்படுகின்றது. அறிவித்தால் அறியும் தன்மை எப்பொருளை சார்ந்திருக்கின்றதோ அப்பொருளின் தன்மை என்ற குணங்களை உடையது ஆன்மா.

ஆன்மாக்கள் சார்ந்ததன் வண்ணமாய் இருக்கும்.
"சத்அசத்தைச் சாராது அசத்தறியா அங்கணிவை உற்ற சதசத்தாம் உயிர்" என்பது திருவருட்பயன்.

பசு பாசத்தோடு சம்பந்தப்பட்டு நிற்கும் நிலை பெத்த நிலை. பசு பாசங்கள் நீங்கி இறைவனைச் சாரும் நிலை முத்தி எனப்படும்.
ஆன்மாக்கள் பல : "எண்ணரிதாய்......."

ஆன்மாவின் மூன்று அவத்தைகள்: கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்தாவத்தை

சைவசித்தாந்த நூல்களில் உதாரணங்கள் காட்டுதல்.
மூவகை ஆன்மாக்கள் : சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர்.

(05 புள்ளிகள்)

**இ. ஆன்ம சித்சக்தி**

சைவசித்தாந்தத்தில் சித்சக்திக்கு முதன்மையும் முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டுள்ளது. இறை சித் சக்தி பற்றியும் ஆன்ம சித் சக்தி பற்றியும் சைவசித்தாந்த சாத்திரங்கள் விபரிக்கின்றன. சித்சக்தி என்பதில் "சித்" என்பதற்கு அறிவு என்பது கருத்தாகும். "சக்தி" என்பதற்கு ஆற்றல் என்பது கருத்தாகும். எனவே ஆன்ம சித்சக்தி என்பதற்கு ஆன்மாவின் அறிவாற்றல் என்பது பொருளாகும். சைவசித்தாந்தம் கூறும் பிரமாணங்களுள் ஆன்ம சித்சக்திக்கு முதன்மையும் முதலிடமும் உண்டு. அந்த வகையில் ஆன்ம சித்சக்தி சைவசித்தாந்தத்தில் சிறப்பிடம் பெறுகின்றது.

(05 புள்ளிகள்)

**ஈ. ஆன்மாவும் இறைவனும்**

ஆன்மாவும் இறைவனும் அநாதிப் பொருட்கள், இறைவன் ஒருவன், ஆன்மா எண்ணரியது. இறைபணி நிற்றல் மூலம் ஆன்மா இறை நிலை எய்துகின்றது.

தாடலை போற் கூடியவை தான் நிகழா வேற்றின்பக்
கூடலை நீரகமெனக் கொள்

தாள் + தலை என்ற சொற்கள் தாடலை எனப் புணருவது போன்று ஆன்மா இறைவனுடன் ஒன்று படுகிறது.

சுத்தாத்துவித முத்தி நிலை

சாத்திர ரீதியான உதாரணங்கள். (05 புள்ளிகள்)

**06. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் ஏற்பட்ட இந்து சமய மறுமலர்ச்சிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆற்றிய பங்களிப்புகளை விவரிக்குக.**

**சூழ்நிலை**

இலங்கையில் அந்நியராட்சிக் காலத்தில் சைவமும், தமிழும் பல இன்னல்களை அனுபவித்தன.

மிஸனரிமார்களின் கிறிஸ்தவ சமயப் பிரசாரத்தால் மதமாற்றம், ஆலயங்கள் பல இடிக்கப்பட்டு சமய கலாசாரம் பாதிக்கப்பட்டது.

**வாழ்க்கை வரலாறு**

ஈழத்தில் உதித்த சைவப்பெரியார்களுள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் முதன்மையானவர்.

ஞானப்பிரகாசர் மரபில் வந்த கந்தப்பிள்ளை சிவகாமி தம்பதியினருக்கு நல்லூரில் 1822 டிசம்பர் 18 ஆம் திகதி பிறந்தவர்.

சுப்ரமணிய உபாத்தியாயர், வேலாயுத முதலியார், சரவணமுத்து உபாத்தியாயர், சேனாதிராய முதலியார் ஆகியோரிடம் கல்வி கற்றவர்.

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் தேர்ச்சியுடையவர். யாழ் வெஸ்லியன் மிஸன் கல்லூரியில் கல்வி பயின்று அக்கல்லூரியிலே 07 ஆண்டுகள் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

சைவ சமயத்தையும் அதன் கருவியாகிய கல்வியினையும் வளர்த்தல் வேண்டும் என்ற உயர் இலட்சியத்தோடு நைட்டிக பிரமச்சாரிய விரதம் பூண்டார்.

**சமயப் பணிகள்**

ஆறுமுகநாவலரின் பணிகளில் சமயப்பணி பிரதானமானது. இப்பணி மூன்று வழிகளில் நோக்கப்படுகிறது. பிரசங்கம், புராணபடனம், கண்டனங்கள்.

தமிழில் சமய நோக்கோடு கிறிஸ்தவ பாதிரிமார்கள் நிகழ்த்திய பிரசங்கத்தைப் போல் நாவலர் 1847 இல் வண்ணார் பண்ணை சிவன் கோவிலில் முதற் பிரசங்கத்தை நிகழ்த்தினார்.

புராண படனங்களை நிகழ்த்தியமை, ஒருவர் பாட ஒருவர் இசையுடன் பயன் சொல்லும் முறை, இம்முறை சமயப் பிரசார ஊடகமாக பல்வேறு இடங்களில் பக்தியை ஏற்படுத்தியது.

கண்டனங்களில் நூல், துண்டுப்பிரசுரம், சைவ தூஸண பரிகாரம், சுப்ரபோதம், வச்சிரதண்டம், யாழ்ப்பாணச் சமநிலை.

**கல்விப்பணி**

சமயக்கல்வியை வளர்க்கும் நோக்கில் 1848 இல் வண்ணார் பண்ணையிலும் சைவப் பிரகாச வித்தியாசாலையை நிறுவியதோடு 1864 இல் சிதம்பரத்திலும் கோப்பாயிலும் பாடசாலைகளை நிறுவினார்.

1871 இல் புலோலியில் சைவ ஆங்கில வித்தியாசாலைகளை நிறுவினார்.

1868 இல் சிதம்பரத்தில் ஓர் ஆதீனத்தையும் அமைக்க முயன்றார். அச்சியந்திரசாலைகளும் நிறுவினார்.

**பதிப்பாசிரியர் பணி**

ஈழத்தில் வண்ணார் பண்ணையிலும் தமிழ்நாட்டில் சிதம்பரத்திலும் அச்சியந்திரசாலைகளை நிறுவினார். 1ம், 2ம், 3ம், 4ம் புத்தகங்கள் சைவவினாவிடை, 1ம், 2ம் புத்தகங்கள், இலங்கை பூமி சாஸ்திரங்கள், அகராதி, இலக்கண விளக்கச் சூறாவளி, ஔவையார் அருளிச்செய்த ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நன்னெறி நூல்களும், திருமுருகாற்றுப்படை, பெரியபுராணம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம், நன்னூல், உபநிடதம் போன்றவற்றிற்குப் புத்துரையும் எழுதினார். நாவலர் பதிப்பே நல்ல பதிப்பு என இன்றும் அறிஞர்களால் போற்றப்படுகின்றது.

**அரும்பணி**

1876, 1877 ஆம் ஆண்டுகளில் கடும் வரட்சியினால் ஏற்பட்ட பஞ்சத்தைப் போக்க கஞ்சித் தொட்டி தர்மம்.
யாழ் கரையூர்ப் பகுதிகளில் ஏற்பட்ட வாந்திபேதி நோயின் போது மக்களோடு மக்களாக நின்று முதலுதவி செய்தமை.
வேளாண்மைப் பணியில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் வேளாண்மைச் சங்கம் அமைத்து சிறந்த சேவையாற்றினார்.
அரசியலிலும் ஈடுபட்டு சட்ட நிர்ணய சபையில் அங்கம் வகிக்க சேர் பொன். இராமநாதனை தெரிவு செய்ய ஆர்வம் காட்டினார்.
ஆலயங்களை புனருத்தாரணம் செய்தார். இதில் திருக்கேதீஸ்வரம் புணருத்தாரணம் செய்யப்பட்டதோடு இதனைத் தொடர்ந்து ஈழத்தில் பல ஆலயங்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டன.
சைவத்தமிழ் மரபில் புலமைமிக்க மாணவர் பரம்பரையை உருவாக்கி இலங்கையின் சைவ மறுமலர்ச்சிக்குக் காரணமாகினார்.

(20 புள்ளிகள்)

**07. இலங்கையின் இந்து சமய வளர்ச்சியில் கோயில்கள் மற்றும் இந்து சமய நிறுவனங்களின் பங்களிப்பு அளப்பரியது இக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் ஒவ்வொன்றினதும் வகிபங்கினை மதிப்பிடுக.**

**அ. திருக்கோணேச்சரம்**

**ஆ. கதிர்காமம்**

**இ. இராமகிருஷ்ண மிஷன்**

**ஈ. யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை**

**அ. திருக்கோணேச்சரம்**

இலங்கையின் கிழக்குக் கடற்கரை ஓரமாக அமைந்துள்ள மலைத்தொடர்களையும் இயற்கைத் துறைமுகத்தையும் கொண்டுள்ள திருகோணமலையில் கடலினுள்ளே நீண்டு உயர்ந்து நிற்கும் குன்றில் இவ் ஆலயம் அமைந்துள்ளது.

புராதன இந்து ஆலயங்களுள் ஒன்றாகவும் மிளிர்கின்றது.

இவ்வாலயத்தின் அருட் சிறப்பை சம்பந்தர், சுந்தரர் பாடல்களில் காண முடிகிறது.

மேலும் கி.மு 1300ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தென ஈழத்து சிவாலயம் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதிகாச புராணங்கள், திருக்கோணாசல தலபுராணம், தட்சிணகைலாய புராணம், தட்சிண கைலாய மான்மியம், கோணேசர் கல்வெட்டு என்பவற்றிலும் இத்தலத்தின் சிறப்புப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாலயத்திற்கு திருப்பணி செய்த மன்னர்களுள் குளக்கோட்டன் சிறப்பிக்கப்படுகின்றான்.

மூர்த்தி தல தீர்த்தச் சிறப்பில் மூல மூர்த்தியாக திருகோண நாதர், அம்பாள் - மாதுமையாள், தீர்த்தம் - பாவநாசம், தலவிருட்சம் - கல் ஆலமரம் விளங்குகின்றது.

விழாக்கள், நித்திய நைமித்திய பூசைகள் நடைபெறுகின்றன.

மகோற்சவ விழா சிறப்பாக நடைபெறுகிறது.

சமூக மேம்பாடு : இனமத வேறுபாடின்றி ஆலய விழாக்களில் கலந்து கொள்ளல், விரதம் இருத்தல், ஆலயத் தொண்டு செய்தல், அன்னதானம், அடியார் வழிபாடு பெருமைக்குரியவையாகும்.

(05 புள்ளிகள்)

**ஆ. கதிர்காமம்**

ஈழத்து முருக தலங்களில் புராதனமாகவும் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகவும் கருதப்படுவது. கந்தபுராண வரலாற்றுடன் தொடர்புடையதாக அறியப்படுவது.

அருணகிரிநாதர் தம் திருப்புகழில் கதிர்காமக் கந்தனைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

இவ்வாலயத்தில் வள்ளியுடன் தொடர்புடைய வேடர் பரம்பரையில் வந்த கப்புறாளைகளே வழிபாடு இயற்றுகின்றனர். வேலுடன் கூடிய இயந்திரப் பெட்டி இங்கு கருவறையில் உள்ளதாக அறியக்கிடக்கின்றது.

இங்கு கப்புறாளை மௌன பூசை ஆற்றுகின்றார். மூர்த்தி, தல தீர்த்தச் சிறப்புகளைக் கொண்ட இவ்வாலய தீர்த்தம் மாணிக்க கங்கையாகும். இவ்வாலயம் பற்றி சமய இலக்கியங்கள் வெளிவந்துள்ளன. கதிர்காமப் பள்ளு முக்கியமானதாகும்.

இவ்வாலயத்தின் மகோற்சவம் ஆடி மாதத்தில் இடம் பெறும். இவ்வாலயத்திற்கு இனதம வேறுபாடின்றி வழிபாடு இடம் பெறுகிறது. பக்தர்கள் யாத்திரை செய்யும் சிறந்த புனிதத் தலமாக இது விளங்குகின்றது. அருணகிரிநாதர் திருப்புகழில் கதிர்காமத்தை

**இறவாமற் பிறவாமற்**
**எனையாழ்சற் குருவாகி**
**பிறவாகித் திரமான........**
**......................................**
**கதிர்காமப் பெருமாளே.**

என்று பாடியுள்ளார். (05 புள்ளிகள்)

**இ. இராமகிருஷ்ண மிஷன்**

இராம கிருஸ்ணரது போதனைகளை இந்து சமுதாயத்தின் நலனுக்காகப் பரப்ப அவரது சீடராகிய சுவாமி விவேகானந்தரால் இந்தியாவில் 1897 ஆண்டில் மே மாதம் முதலாம் திகதி இராமகிருஸ்ண மிஷன் நிறுவப்பட்டது.

பல்வேறு சமயத்தவர்களிடையே சமய சமரச நோக்கை நிலைநாட்டுவதே மிஷனின் முக்கிய கடமையாக அமைந்தது. சமயப்பணி, சமூகப்பணி ஆகியவற்றை உலகளாவிய நிலையில் மேற்கொண்டு இந்துப்பண்பாடு வளர்ச்சி பெற உதவுகிறது. இந்த நிறுவனம் மேற்கொள்ளும் சமயப்பணிகள் பின்வருமாறு.

உருவ வழிபாடு, பக்தி நெறி, இறைநாம பஜனை, பிரார்த்தனை ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து மக்களிடையே சமய அறிவை விழிப்புணர்வுடன் ஏற்படுத்தல்.

துறவுப் பயிற்சிக்கு முக்கியத்துவம் வழங்குதல்.

வேத உபநிடத கருத்துக்கள் சார்ந்த உபதேசங்கள் மூலம் இந்துப்பண்பாடு வளர்ச்சி பெற உதவுதல்.

இந்து சமயம் சார்ந்த சாஸ்திர நூல்கள், கிரியை மரபு சார்ந்த நூல்கள் ஆகியவற்றை மக்கள் அறிந்து பயன்பெற நூல் வடிவில் அவற்றை பதிப்பித்து வெளியிடல்.

சமஸ்கிருத மொழியிலுள்ள சமய நூல்களின் விளக்கங்களை தகுதி வாய்ந்த அறிஞர்களது உதவியுடன் தமிழிலும், ஆங்கிலத்திலும் நூலாக வெளியிடல்.

சமய வகுப்புக்கள், சமயப் போட்டிகளை நடத்தி பரிசில்களை வழங்கி இளந்தலைமுறைகளை சமய வாழ்வுக்கு ஊக்குவித்தல்.

மேலும்,
மக்களிடையே ஒழுக்க நியமங்களை பேண அறிவுறுத்தல்.
ஆதரவற்ற மாணவர்களுக்கு உணவு, உடை, உறையுள் மற்றும் இலவசக் கல்வி வழங்குதல்.
இயற்கை அனர்த்தங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுதல் போன்ற சமூகப் பணிகளை இந்நிறுவனம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05 புள்ளிகள்)

**ஈ. யாழ்ப்பாண சைவபரிபாலன சபை**

அறிமுகம்

சைவத்தையும் தமிழையும் போற்றிப் பாதுகாத்த நாவலரது வழியில் அவரது சிந்தனைகளையும் கொள்கைகளையும் கொண்டு யாழ்ப்பாணத்தில் உருவாகியதே யாழ்ப்பாணச் சைவ பரிபாலன சபையாகும்.

1888 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சைவ பரிபாலன சபை 1890.09.17 இல் யாழ்ப்பாண சைவபரிபாலன சபை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

**நிறுவப்பட்ட நோக்கம்**

சைவசமயத்தின் வளர்ச்சிக்கும், பிரசாரத்திற்கும் ஊக்கமளிப்பது.
சைவக் கோயில்களைத் தாபித்தல், பழுது பார்த்தல், திருத்தியமைத்தல், கோயில்களை பொறுப்பேற்று நடாத்துதல்.
சைவப் பாடசாலைகளை நிறுவி நிர்வகித்துப் பராமரித்தல் சைவப் பிள்ளைகளுக்கான நூல்களைப் பிரசுரித்தல்.

**பணிகள்**

இந்து சாதனம் என்னும் பத்திரிகையைத் தமிழில் வெளியிடுதல்.
ஆங்கிலத்தில் Hindu Organ என்ற பெயரில் வெளியிடுதல்.
வருடந்தோறும் தமிழக அறிஞர்களும் எமது நாட்டு அறிஞர்களும் பங்கு கொள்ளும் சைவசமய மாநாட்டை நடாத்துவதன் மூலம் சமய விழிப்புணர்வு ஏற்படுத்தல்.

நாவலரதும் அவரது ஞான பரம்பரையினதும் சமய நூல்களை மறு பிரசுரம் செய்து வெளியிடல்.

பாடசாலை மாணவர்களிடையே பரீட்சை நடாத்தி சைவ மாநாட்டின் போது பரிசில்களை வழங்கி ஊக்குவித்தல்.

சைவப்புலவர், சித்தாந்தப் பண்டிதர் போன்ற பரீட்சைகளை நடாத்திப் பட்டங்களை வழங்குதல்

நாயன்மார் குரு பூசை, நாவலர் குருபூசை தினங்களை அனுட்டித்தல்.

புராண படனம், திருமுறைப் பாராயணம் நடாத்துதல்.
சைவ சமய சமூக மேம்பாட்டைப் பாதுகாக்கும் பணிகளை முன்னெடுத்தல். (05 புள்ளிகள்)

**08. மேல்வருவனவற்றுள் எவையேனும் நான்கிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.**

**அ. ஆகமம் கூறும் நித்திய கிரியைகள்**

**ஆ. விசிட்டாத்வைதம்**

**இ. வைசேடிகம்**

**ஈ. சிவஞானசித்தியார்**

**உ. சூரிய வழிபாடு**

**ஊ. பெரியானைக்குட்டி சுவாமிகள்**

**அ. ஆகமம் கூறும் நித்திய கிரியைககள்**

ஆகமம் என்பதன் பொருள்:

தொன்று தொட்டு வரும் அறிவு

ஆன்மா மலநாசம் பெற்று இறைவனை அடைய வழிகாட்டும் நூல் எனவும் பொருள் கொள்ளப்படும்.

இந்து சமயத்தில் வேதங்களைப் போல் ஆகமங்களும் முதனூலாகக் கொள்ளப்படுகின்றன.

சிவாகமங்கள் நித்திய கிரியைகள் நைமித்திய கிரியைகள் காமிகக் கிரியைகள் என்பன பற்றிக் கூறுகின்றன.

**நித்திய கிரீயைககள்**

பொதுவாக ஆகமங்கள் ஆறுகால பூசைகளை எடுத்துக் கூறுகின்றன.

உஸத்கால பூசை, காலை சந்திப் பூசை, உச்சிக்காலப் பூசை, சாயரட்சைப் பூசை, இரண்டாம் காலப் பூசை, அர்த்த ஜாமப் பூசை என்பனவாகும்.

திருச்செந்தூர் ஆலயத்தில் பன்னிருகாலப் பூசைகள் நடைபெறுகின்றன.

நித்திய பூசையின் அங்கங்களாக அபிசேகம், அலங்காரம், தீப ஆராதனை, நிவதேனம் தோத்திரம் என்பன நித்திய பூசையில் பஞ்சோபசாரம், கந்தம், புஷ்பம், தூபம், தீபம் நைவேத்தியம் என்பன இடம்பெறும்.

**ஆ. விசிட்டாத்வைதம்**

கி.பி 12 ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ பெரும்புத்தூரில் வாழ்ந்த இராமானுஜரால் நிறுவப்பட்டது. பன்மைவாதம், தத்துவத்திரயக் கொள்ளை, உபயவேதாந்தம் ஆகிய காரணச் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

ஈஸ்வரன், ஆத்மா, உலகு ஆகிய முப்பொருட்களும் உண்மைப் பொருட்கள் எனச் சாதிக்கிறது.

விசேடனங்கள் - விசேடியம் இவற்றின் நெருங்கிய பிணைப்பே விசிட்டாத்வைதம்.

சரீர சரீரி சம்பந்தம், அங்க அங்கி சம்பந்தம் பற்றிய விளக்கம்.

உலகமும் உயிர்களும் ஈஸ்வரனின் அங்கங்கள் பரிணாம வாதத்தினால் உலகின் இருப்பு நிரூபிக்கப்படுகின்றது.

சுவகத பேதம்

ஈஸ்வரன் - விஸ்ணு மங்கல கல்யாண குணங்கள்.

ஆன்மாக்கள் – அநாதி, அனேகம்

ஆன்மாக்களின் நோக்கம் – வைகுண்டப் பேறு.

விடுதலைக்கான வழி – 3 வகையோகங்கள், பக்தி – பிரபக்தி சிறப்பு. விதேஹ முத்தியை வலியுறுத்தல்.

**இ. வைசேடிகம்**

அறுவகைத் தரிசனங்களில் ஒன்றாகும். பிரபஞ்ச இயற்கையின் பல்வகைமையினை வலியுறுத்தும் தத்துவக்கோட்பாடாகும்.

வைசேடியம் – விசேடத்துவம் அதாவது பிரபஞ்சத்திலுள்ள பருப்பொருட்கள் யாவற்றுக்கும் தனித்தன்மைகள் உண்டு என்பதை வலியுறுத்துகின்றது. இதனால் பன்மையியலான மெய்ம்மை வாதம், பன்மையியற் காட்சிப் பொருட் கொள்கை ஆகிய சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகிறது.

ஸ்தாபகர் : கணாதர்

இவர் இயற்றிய நூல் : வைசேடிய சூத்திரம்

பிரசத்த பாதரின் பதார்த்த தர்மசங்கிரகம் வைசேடிய சூத்திரத்துக்கான முக்கிய உரை நூலாகும். உதயணர், சிறீதரர் ஆகியோரும் இத்தரிசனம் தொடர்பில் முக்கிய சிந்தனையாளர்களாகத் திகழ்கின்றனர்.

பதார்த்தக் கொள்கை, அணுக்கொள்கை என்ற இரண்டு முக்கிய தத்துவக் கோட்பாடுகளை வைசேடிகம் முன்வைக்கின்றது. பிரபஞ்ச இயற்கையினை சப்த பதார்த்தங்களாக வகுத்தும் தொகுத்தும் கூறியதே பதார்த்தக் கொள்கை. (திரவியம், குணம், கர்மம், சாமானியம், விசேடம், சமவாயம், அபாவம்)

பஞ்ச பூதங்கள் போன்ற பௌதிகப் பொருட்களை மட்டுமன்றி ஆத்மன், மனம் ஆகியவற்றையும் திரவிய வகைப்பாட்டுக்குள் உள்ளடக்கியமை வைசேடிகத்தின் இயற்கை வாதப் போக்கிற்குத் தக்க எடுத்துக்காட்டாகும்.

பருப்பொருட்களில் மேலும் பிரிக்க முடியாத தனி மூலத்தை பரமாணு என வைசேடிகம் சுட்டுகிறது. ஆகாயம் தவிர்ந்த நால்வகைப் பூதங்களிலும் பரமாணுக்கள் உள. இவை இரட்டையணுக்களாகவும் மூவிணை அணுக்களாகவும் சேர்க்கையுற்றுப் பௌதிகப் பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கின்றன.

வைசேடிக தத்துவம் பிற்காலத்தில் நியாய தரிசனத்துடன் நெருக்கமாகப் பிணைவுற்றது. இதனால் இவையிரண்டும் சமாந்தர தரிசனங்கள் எனச் சுட்டப்படலாயின.

### ஈ. சிவஞான சித்தியார்

அருணந்தி சிவாசாரியரால் இயற்றப்பட்டது. சிவஞானபோதத்தின் வழி நூலாகும். மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கிலும் மிகவும் விரிவானது. இந்நூலில் சுபக்கம், பரபக்கம் என்னும் இரு பிரிவுகள் உள்ளன.

உலகாயுதம் முதல் பாஞ்சராத்திரம் ஈறாக உள்ள பரசமயக் கோட்பாடுகளை எடுத்துக்கூறி, அதனைச் சித்தாந்த நோக்கில் மறுப்புச் செய்யும் பகுதி பரபக்கம் எனப்படுகிறது.

சித்தாந்த சைவசமயத்தின் கோட்பாடுகளை உடன்பாட்டு முறையில் நிறுவும் பகுதி சுபக்கம் எனப்படும்.

சிவஞான சித்தியாரின் முதல் மூன்று சூத்திரங்கள் முறையே பதி, பசு, பாச உண்மையினையும் நான்காம் ஐந்தாம் ஆறாம் சூத்திரங்கள் முறையே பதி, பசு, பாச இலக்கணங்களையும் ஏழாம் சூத்திரம் சாதித்துப் பெறற்கரிய பொருள் பற்றியும், எட்டாம் சூத்திரம் சாதனை இயல்பு பற்றியும், ஒன்பதாம் சூத்திரம் சாதனை செய்யுமாறு பற்றியும் பத்தாம் சூத்திரம் பெத்த நீக்கம் பற்றியும், பதினொராம் சூத்திரம் முத்திப் பயன் பற்றியும், பன்னிரெண்டாம் சூத்திரம் சீவன் முத்திநிலை பற்றியும் குறிப்பிடுகின்றது. இந்நூற் சிறப்பினை சிவத்தின் மேல் தெய்வமில்லை. சிவஞான சித்திக்கு மேல் ஒரு சாத்திரமில்லை என்று போற்றுவர்.

### உ. சூரிய வழிபாடு

இயற்கை குறித்த இந்து சமுதாயத்தின் பிரக்ஞை வெளிப்பாட்டின் ஒரு பரிணாமமாகச் சூரியவழிபாட்டைக் குறிப்பிடலாம்.

பயிர்ச்செய்கை, நீர்வளம், ஒளி குறித்த நன்றியுணர்வும் அகவிருள் போக்குதல் குறித்த குறியீட்டு வெளிப்பாடும் சூரிய வழிபாட்டினைக் கட்டமைக்க அடிப்படைகளாயின.

வேதங்களில் சூரியன் விண்ணுக்குரிய தெய்வமாகப் போற்றப்படுகின்றான். சூரிய காயத்திரி மந்திரம் வேதங்களில் இடம்பெறுகிறது.

இதிகாசங்களில் சிவசூரிய மற்றும் சூரிய நாராயண வழிபாட்டு முறைகள் இடம்பெற்றுள்ளன. இவை சைவ, வைணவ நெறிகளுடன் சூரிய வழிபாடு இயைந்து சிறந்தவாற்றை சுட்டி நிற்கின்றன.

பதினெண் மகாபுராணங்களில் ஒன்றாகிய பிரம்ம வைவர்த்த புராணம் சூரிய வழிபாட்டின் மேன்மையினை உணர்த்துவதாகும்.

பழந்தமிழ் இலக்கியங்களிலும் சூரியவழிபாடு பற்றிய குறிப்புக்கள் உண்டு.
உதாரணம் : "ஞாயிறு போற்றுதும்" சிலப்பதிகாரம் உச்சிற்கிழான் கோட்டம்.

ஆலய வழிபாட்டு மரபில் நவக்கிரக அதிபதியாக வழிபடுகின்றமை.
வாரங்களில் ஞாயிற்றுக்கிழமைகளும் விசேடமாக ஆவணி ஞாயிறும் சூரியனுக்குரிய விரத நாட்களாகச் சிறப்புப் பெறுகின்றன.

பண்டிகை – தைப்பொங்கல்
சூரிய வழிபாட்டுக்கென்றே விசேடமாக அமைக்கப்பட்ட ஆலயங்களாக ஒரிசாவிலுள்ள கோனராக் சூரியனார் கோயில், தமிழ் நாட்டில் கும்பகோணத்திலுள்ள சூரியனார் கோயில் என்பன குறிப்பிடத்தக்கன.

**ஊ. பெரியானைக்குட்டி சுவாமிகள்**

இவர் இந்தியாவில் தமிழ் நாட்டில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அவதரித்தார். இலங்கையிலே உள்ள கண்டி மாநகரில் இளமைக் காலத்தைக் கழித்தவர். கண்டி கதிரேசன் கோயிற்படிகளில் தங்கி சாதனைகளில் ஈடுபட்டவர். இவர் நவநாத சித்தரின் நட்பினையும் சித்தானைக்குட்டி சுவாமிகளை உயரிய சீடராகவும் கொண்டவர். இவருடன் சேர். பொன். அருணாசாலம் தொடர்பு கொண்டிருந்தமை.

இவரது பணிகள் பின்வருமாறு

கொழும்பு மாநகரில் ஆன்மீக ஞானத்தை மிளிரச் செய்தமை.

சாதுக்களின் புகையிரதக் கட்டண அறவீட்டினை இல்லாமல் செய்தமை.

**இவரது சித்துக்கள் பின்வருமாறு**

கண்டியில் தான் இருந்த இடத்தில் கொல்லைப் பக்கத்தில் "அம்மா அம்மா பாம்பு பாம்பு" என்று அழைத்து அவர் மாயமாக மறைந்தமை.

மலங்கழித்த இடத்தில் தங்கக்குவியல் காணச்செய்தமை.

புகையிரதத்தை ஓடாமல் செய்து வாயிலிருந்து காற்றை வெளியே ஊதி புகையிரதத்தை ஓடச் செய்தமை.

கப்பம் வேண்டி பிறருக்கு தீமை செய்த கயவனை நல்லவனாக மாற்றியமை.

இராமநாதபுரத்தில் தொற்றுநோயுள்ள வீடுகளுக்கு சென்று உணவை வாங்கி உண்டு தொற்று நோயைப் போக்கியமை.

கொழும்பு முகத்துவாரத்தில் உள்ள அருணாச்சலேஸ்வர ஆலயம் இவருடைய சமாதியில் கட்டப்பட்டது.

(04 x 05 = 20 புள்ளிகள்)